# தமிழர் விடுதலைக் கூட்டணி


# தேர்தல் வெளிப்பகர்வு

பாராளுமன்றத் தேர்தல்

10-10-2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் தேசியத் தலைவர்



தந்தை

உயர் திரு சா.ஜே.வே. செல்வநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள், பாராளுமன்றத்துக்குத் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காகப் பொதுத் தேர்தலுக்கான பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் இன்றைய சூழ்நிலையில் அவர்தம் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் தெளிவான கொள்கைநோக்கும், உபயோகமும் நிறைந்த ஒரு பங்களிப்பைச் செய்வதே அவர்கள் தெரிவு செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்களின் தலையாய கடமையாகும்- இனப் பிரச்சனைக்குக் காணும் திருப்திகரமான தீர்வொன்று மட்டுமே இன்று தமிழ் மக்கள் நாள்தோறும் அனுபவிக்கும் எண்ணற்ற துன்பதுயரங்களுக்குப் பெரிதும் பரிகாரமாய் அமையும்.

எமது கடந்த கால நிகழ்வுகளை அலசி ஆராய்ந்து எமது எதிர் காலத்தை மிக நுணுக்கமாகவும், ஆழமாகவும் மதிப்பீடு செய்வதற்கு இத் தேர்தல் ஒரு சிறந்த சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியும், அதன் முக்கிய பங்காளியாக விளங்கும் தமிழ் அரசுக் கட்சியும், எமது மக்களின் எதிர்காலத்தையும், தனித்துவத்தையும், அரசியல் உரிமைகளையும் பேணுவதைக் கருத்திற் கொண்டு கொள்கைக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவை. இக்கொள்கைக் கோட்பாடுகளில் பிரதானமானவையாகக் கருதப்படுபவை:-

1- இலங்கை; பல்லின மக்களைக் கொண்ட ஒரு நாடு. அத்தகைய இனங்கள் ஒவ்வொன்றும்; தனித்துவமான மொழி, கலாசாரக் கட்டமைப்பு, பல்வேறு மத நம்பிக்கை, பாரம்பரியமாகப் பேணப்பட்டுவரும் மரபுகள், தமக்கெனத் தொன்மையான தனி வரலாறு என்பவற்றைக் கொண்டவையாக உள்ளன. மேலும், அவை தமது தனித்துவத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்கான உரித்துடையவை. சிங்கள மக்கள் எவ்வாறு ஒரு தனித் தேசிய இனமோ; அது போன்றுதான் தமிழ் மக்களும் ஒரு தனித் தேசிய இனம். எனவே, இனங்களுக்கிடையே உண்மையான பிணைப்பை ஏற்படுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமெனில் முதற்கண் இத் தனித்துவத்தை அங்கீகரிப்பது அவசியம்.

2- தமிழ் மக்கள் இந்த நாட்டின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் வரலாற்றுக் காலந்தொட்டு வாழ்ந்துவரும் பூர்வீகக் குடிமக்கள்- இப்பிரதேசங்களில் தமது மொழி, கலாசாரத் தனித்துவத்தைப் பேணுவதற்கு மறுக்க முடியாத விசேட அக்கறையும், உரிமையும் உடையவர்கள்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் தலைவரும்; தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவருமான தந்தை செல்வா இந்த நாட்டின் பெரிதும் மதிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும், ஐ.தே.கட்சியினதும் பிரதமர்களுடன் 1957, 1965ஆம் ஆண்டுகளில் மேற்கொண்ட பண்டாரநாயக்கா- செல்வநாயகம் ஒப்பந்தம்; டட்லி சேனநாயக்கா- செல்வநாயகம் ஒப்பந்தம் என்பன மேற்கூறிய கொள்கைகளை அங்கீகரித்துள்ளன-

3- மேற்கூறியவற்றின் அடிப்படையான அம்சம் தமிழ்மக்கள் தமது அரசியல் எதிர்காலத்தையும், தலைவிதியையும் தீர்மானிக்கும் உரித்துடையவர்கள் என்பதை அங்கீகரித்தல் ஆகும். சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்துதான் செல்ல வேண்டும் என்ற உரிமையின்பாலானதாக இருக்க வேண்டுமென்றதில்லை. இது, தமிழ் மக்களுக்கு தமது எதிர்கால அரசியல் அந்தஸ்து தொடர்பாக தீர்மானம் மேற்கொள்வதில் தீர்க்கமாகவும், முழுமையாகவும் தமது பங்களிப்பைச் செலுத்துவதற்கான மறுக்க முடியாத, தங்குதடையற்ற உரிமையை வழங்குவதாகும். அவர்கள் ஒரு தனித் தேசிய இனமாய் இருப்பதும், நாட்டின் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தைத் தாயமாகக் கொண்டு வரலாற்றுக் காலம் தொட்டு வாழந்து வருவதும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை நியாயப் படுத்துகின்றன.

4- நாடு சுதந்திரம் அடைந்தவேளை, இந்த நாட்டில் வாழ்ந்த சகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களதும், அவர்களது எதிர்காலச் சந்ததியினரதும் குடியுரிமை, வாக்குரிமை, ஏனைய ஜனநாயக உரிமை என்பவற்றை அங்கீகரித்தல்.

ஒற்றுமைப்பட்ட நாட்டினுள் ஜனநாயகம் தமிழ் மக்களுக்கு அர்த்தமுடையதாய் இருக்க வேண்டுமெனில் மேற்கூறிய கொள்கைகளின் அத்திவாரத்தில் அந்த ஜனநாயகக் கோட்பாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இந்த நாட்டில் தொடர்ச்சியாக ஆட்சிபீடம் ஏறிய அரசாங்கங்கள் தாம் வழங்கிய உறுதிமொழிகளை மதித்துச் செயற்படுவதில் அக்கறையோ அல்லது விருப்பமோ கொள்ளவில்லை. அத்துடன், மேலே விவரிக்கப்பட்டுள்ள கோட்பாடுகளை அங்கீகரிப்பதற்கு எவ்விதமான அர்த்தமுள்ள நடவடிக்கையையும் அவை எடுக்கவில்லை. எனவேதான், த.வி.கூட்டணி 1976ஆம் ஆண்டு தனிநாடு கோருவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது.

ஆயினும், தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாட்டுக் கோரிக்கைக்குப் பதிலாக சாத்தியமான மாற்று ஏற்பாட்டைப் பரிசீலிப்பதற்குத் தயாராய் உள்ளது. இவ்விடயம் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி சர்வதேச சமூகத்தின் கருத்திலும், குறிப்பாக தமிழ் மக்கள் நெருக்கமான கலாசார, பண்பாட்டு வரலாற்று உறவுகளைக் கொண்டுள்ள இந்தியாவின் கருத்திலும் கவனம் செலுத்தியுள்ளது. சமரசத்துக்கு இடமின்றி தனிநாட்டுக் கோரிக்கை வற்புறுத்தப்படின் தமிழ் மக்கள் சகித்துக் கொள்ள வேண்டிய பாரிய துன்ப துயரங்கள் பற்றியும் த.வி.கூட்டணி அக்கறை கொண்டுள்ளது. அத்துடன், சாத்தியமான மாற்று ஏற்பாட்டை அடைவதற்கு த.வி.கூட்டணி தொடர்ச்சியாகவும், உத்வேகத்துடனும் செயற்பட்டு வந்துள்ளது.

பேரினவாதமும், அரசியலமைப்பின் ஒற்றையாட்சிப் பண்பும் நீண்டகாலமாகப் பெரிதும் இடையூறு மிகுந்த தடைக் கற்களாக அமைந்துள்ளன. 1987 ஆடி (யூலை) 29ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கை இத் தடைகளைத் தாண்டுவதற்கான முதலாவது காரணியாக அமைந்தது. த.வி.கூட்டணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கு எல்லா வழிகளிலும் பாரிய பங்களிப்பைச் செய்துள்ளது. பொய்யான தகவல்கள், உண்மைக்கு மாறான தகவல் பரிமாற்றங்கள் என்பன கட்டவிழ்த்து விடப்பட்ட போதெல்லாம்; அவற்றை ஆக்க பூர்வமாக முறியடித்து த.வி.கூட்டணி உண்மை நிலைமைகளைப் பகிரங்கப்படுத்தியதன் பலனாக இந்திய- இலங்கை ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டுக் கீழ்வரும் விடயங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

''இலங்கை ஒரு பல்லின, பலமொழி பேசுகின்ற - சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் (சோனகர்), பறங்கியர் எனப் பல சமூகங்களைக் கொண்டுள்ள ஒரு நாடு. ஒவ்வொரு இனமும் வெவ்வேறான கலாசார, இன, மொழி அடையாளங்களைக் கொண்டுள்ளன'' இவை கவனமாகப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

''வடக்குக் கிழக்கு மாகாணங்கள் சரித்திர காலம் தொட்டு தமிழ்பேசும் மக்களின் பூர்வீக வதிவிடம் என்பதையும், அவர்கள் காலங்காலமாக இப்பிரதேசத்தில் இன்றுவரை வாழ்ந்து வருகின்றனர்'' என்பதையும் இந்திய- இலங்கை ஒப்பந்தம் அங்கீகரிக்கின்றது.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் கீழும், அதனைத் தொடர்ந்து வந்த அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் படியும், வடக்குக் கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டன. ஒரு வருடத்தின் பின் நடத்தப்படும் மக்கள் கருத்துக் கணிப்பின் மூலம் இவ் இணைப்பு நிரந்தரமாகத் தொடரவேண்டுமா; எனத் தீர்மானிக்கப்படும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு இரு மாகாணங்களும் இணைக்கப்பட்டன. த.வி.கூட்டணி இதனை மிக உறுதியாய் எதிர்த்ததுடன், கருத்துக் கணிப்பு நடைபெறுவதைத் தடுத்து நிறுத்துவதில் சாணக்கியத்துடன் தளராது பாடுபட்டது. இம் முயற்சியின் விளைவாக 13 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் கருத்துக் கணிப்பு நடைபெறவில்லை என்பது மட்டுமன்றி, எமது வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்து இணைந்த அமைப்பாகவே உள்ளன.

நாட்டின் ஒற்றையாட்சி அரசியலமைப்புத் தன்மை தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரத்தையும், வளங்களையும் நற்பயன் மிக்கதாகப் பகிர்ந்து கொள்வதற்குப் பெரும் இடையூறாக அமைந்துள்ளது. அரசியலமைப்புச் சீர்திருத்தம் சம்பந்தமாக த.வி.கூட்டணி அர்ப்பணிப்புடன் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது. தற்போது முன்வைக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு ஆலோசனை தமிழர் பிரச்சனைக்கு உறுதியான அல்லது, இறுதியான தீர்வாக இருக்க முடியாதென்பதில் த.வி.கூட்டணி மிகத் தெளிவாக உள்ளது. அரசாங்கம் ஐ.தே.கட்சியுடன் கருத்தொருமை ஏற்படுத்தும் முயற்சியில் அரச கட்டமைப்பு, அரச காணிகளின் உரிமை, அவற்றின் பாவனை என்பன தொடர்பாக முன்னைய ஆலோசனைகளில் காணப்பட்ட சட்ட வரைவுகளை விடக் கணிசமான மாற்றங்களைச் செய்துள்ளது.

மேலும், வடக்குக் கிழக்கு 'அதிகாரப் பகிர்வு அலகு' எவ்வாறு இருக்க வேண்டும் என்பதிற்கூட இன்னமும் தான் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்மானத்தை எட்ட முடியாதுள்ளனர். இவர்களின் இந்த நிலைப்பாடு த.வி.கூட்டணிக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. இதன் காரணமாகத்தான் அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்ட மூலத்துக்கு எமது ஆதரவை வழங்குவதில்லை எனத் தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானித்தது.

மேற்குறித்த விடயங்கள் மீதான த.வி.கூட்டணியின் உடன்பாடின்மை உள்ள நிலையிலும்; அரசு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அரசியலமைப்புச் சீர்திருத்தச் சட்டமூலம் ஒற்றையாட்சித் தன்மையை இல்லாதொழிக்கும் என்ற வகையில் அமைந்துள்ளமை கவனத்திற் கொள்ளத்தக்கதே. அரச காணிகளின் நிருவாகத்தில் பிராந்தியங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்படுமென்றும், இப்போதுள்ள இணைந்த வடக்குக் கிழக்குப் பிராந்திய நிலைமை (10) பத்து வருடங்களுக்குத் தொடருமென்றும்; குறிப்பிட்ட காலம் பூர்த்தியானதும், மக்கள் கருத்துக் கணிப்புக்கு உட்படுத்தப் படுமென்றும் சட்ட மூலத்தில் கூறப்பட்டுள்ளது. ஆயினும், த.வி.கூட்டணி மிக நியாயமான காரணங்களின் நிமித்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தேச கருத்துக் கணிப்பை எதிர்க்கின்றது. மேலும், இத்தகைய ஒரு மக்கள் கருத்துக் கணிப்பு நடத்துவது ஜனநாயகத்தை இழிவு படுத்துகின்ற நடவடிக்கை என்பதே த.வி.கூட்டணியின் கருத்தாகும். எனவே, மக்கள் கருத்துக் கணிப்பு நடத்தப்படுவதைத் தடுப்பதற்கு தன்னாலான சகல முயற்சியையும் த.வி.கூட்டணி மேற்கொள்ளும். அத்தகைய ஒரு கருத்துக் கணிப்பு இடம் பெறுவதைத் தன்னால் வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்த முடியும் என்பதில் த.வி.கூட்டணி நம்பிக்கை கொண்டுள்ளது-

பிராந்தியங்களுக்கென ஒதுக்கப்பட்ட சகல துறைகள் மீதும் அப்பிராந்தியங்களுக்கு முழுமையான சட்டவாக்க, நிறைவேற்று அதிகாரம் உண்டு. பிராந்தியங்களுக்கு பாரப்படுத்தப்பட்ட விடயங்கள் எவற்றின் மீதும் மத்திய அரசாங்கம் வழமையான சூழ்நிலைகளின் போது எத்தகைய நியாயாதிக்கமும் செலுத்த முடியாது. பிராந்தியங்களுக்குரிய அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் சம்பந்தமாயும், மற்றும் மத்திய அரசுக்கும், பிராந்தியங்களுக்கும் முறையே ஒதுக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் ஏதேனும் திருத்தங்கள் செய்வதாயின் அத்திருத்தங்களுடன் சம்பந்தப்பட்ட பிராந்தியசபை பிரேரணை ஒன்றின் மூலம் திருத்தங்களை அங்கீகரித்தாலன்றி எந்தவித மாற்றமும் செய்யமுடியாது-

மேற்கூறிய தீர்மானங்களின் படிமுறையான வளர்ச்சிக்கு த.வி.கூட்டணி நிறைந்த பங்களிப்பைச் செய்துள்ளது. இதற்கு முன்னர் முன்மொழியப்பட்ட அல்லது, நிறைவேற்றப்பட்ட ஆலோசனைகள், சட்டங்கள் என்பவற்றுடன் ஒப்பிடுகையில் மேற்கூறிய பல முக்கிய விடயங்களில் ஓரளவு முன்னேற்றம் உள்ளதென்றுதான் கூறவேண்டும்-

இந்த அரசியலமைப்புச் சீர்திருத்த ஆலோசனைகள், பாராளுமன்றத்தில் முன்மொழியப்பட்டுச் சட்டமாக்கப்பட வேண்டியுள்ளது. இவ் ஆலோசனைகளில் பல குறைபாடுகள் உள்ளன. அவற்றின் விரிவு காரணமாக அவைபற்றி விளக்கமளிப்பதைத் தவிர்க்க வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள ஆலோசனைகள் சரியான திசையை நோக்கிய ஆரம்பமுன்னெடுப்பாக மட்டுமே கருதப்பட வேண்டியவை- மேலும், தமிழர் பிரச்சினைகளுக்கு இறுதியானதும் ஆக்க பூர்வமானதுமான ஒரு நிர்வாக ஏற்பாடாக அரசாங்கத்தின் இவ் ஆலோசனைகளை த.வி.கூட்டணி கருதவில்லை. இறுதியான, உறுதிமிக்க தீர்வு உருவாவதற்கு இன்னும் அதிகம் செல்லவேண்டியுள்ளது. அத்தகைய தீர்வு வடக்குக் கிழக்குப் பிராந்தியத்துடன் சமச்சீரற்ற முறையில் ஆட்சி அதிகாரம் பகிர்ந்து கொள்வதை உட்படுத்தியதாய் அமைய வேண்டும்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், மூன்றாந்தரப்பு சர்வதேச மத்தியஸ்தத்துடன் நற்பயன் தரும் முறையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சு வார்த்தைகள் கட்டாயமாக நடத்தப்பட வேண்டுமென்றும் த.வி.கூட்டணி விடாப் பிடியாகத் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றது. யுத்தம் எவ்வித தடையுமின்றி முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டுமென்றால் அதற்கு வேண்டிய இறுதித் தீர்வைக் காண்பதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பங்களிப்பு மிக மிக இன்றியமையாதது என்பதை மறுகதைக்கு இடமின்றி த.வி.கூட்டணி சகலருக்கும் கூறிவைக்க விரும்புகின்றது.

''சமாதானத்துக்கான யுத்தம்'' என்றும்; ''யுத்தம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரானதே ஒழிய, தமிழர்களுக்கு எதிரானதல்ல'' என்றும் உரக்கக் கூறும் அரசாங்கத்தின் ஏமாற்றுச் சுலோகங்களைத் த.வி.கூட்டணி ஆணித்தரமாக நிராகரித்துள்ளது. யுத்தத்தின் மூலம் சமாதானம் ஒருபோதும் கிட்டாது. அத்தகைய சமாதானத்தை நிதானமான, நியாயமான பேச்சுவார்த்தை மூலமே அடைய முடியும் என்பதும் த.வி.கூட்டணியின் உறுதியான நிலைப்பாடாகும். இந்த யுத்தம் தொடர்வதன் காரணமாகவே தமிழ் மக்களின் சமூகவாழ்வின் சகலதுறைகளும் மிகப் பாரதூரமாகப் பாதிப்படைந்துள்ளன என்பதைத் த.வி.கூட்டணி ஐயந்திரிபற வெளிப்படுத்தியுள்ளது-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, இந்த யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். த.வி.கூட்டணி பாராளுமன்றத்திலும், இந்நாட்டு அரசுத் தலைவரிடமும்; ஏனைய அரசாங்க, எதிர்க்கட்சி தலைவர்களிடமும் சந்தேகத்துக்கு இடமின்றி மிகத் தெளிவாக இன்றைய நிலைமையையும், கூட்டணியின் நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன் நில்லாது சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் சலிப்பின்றி, தொடர்ந்து மேற்கூறிய நிலைப்பாட்டுக்குத் தீவிரமாக ஆதரவு திரட்டுகின்றது. வெளிநாட்டுத் தூதரகங்களின் இராஜதந்திரிகள், இந்நாட்டுக்கு வருகை தரும் பலநாடுகளின் சர்வதேசத் தலைவர்கள், வெளிநாடுகளுக்குச் சென்று அந்நாட்டுத் தலைவர்கள், அங்குள்ள சர்வதேச மன்றுகளில் தவறாது இடம் பெறும் ஒழுங்கான சந்திப்புகளில் பங்குபற்றும் பிரதிநிதிகள் என்போரிடமெல்லாம் உண்மை நிலவரங்களை ஒளிவு மறைவின்றித் தெரிவித்து வருகின்றது.

தமிழ் மக்களின் இன்றைய அவலம், எமது மக்களின் எதிர்காலத்துடன் சம்பந்தப்பட்ட அரசியல், மற்றும் மனிதாபிமான விளைவுகள் பற்றியும் த.வி.கூட்டணி தெளிவுபடுத்தி வருகின்றது. த.வி.கூட்டணியின் இப் பரந்துபட்ட நடவடிக்கைகள் காரணமாக உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் இப்பிரச்சனைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வின் அவசியம் உணரப்பட்டுள்ளது.

த.வி.கூட்டணி தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுப்பதை நோக்கிய தனது பயணத்தில் மிக நிதானமாகச் செயற்படுகின்றது. இந் நோக்கத்தின் வழி தெற்காசியப் பிராந்தியத்தின் வலிமைமிகு நாடாகிய இந்தியா, மற்றும் ஏக வல்லரசாகிய ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பெரிய பிரித்தானியா, கனடா, நோர்வே எனப் பலநாடுகளுடன் எமது நிலைமை தொடர்பாக மிக நெருக்கமான தொடர்புகளை வைத்துள்ளது. சர்வதேச சமுதாயம் ஆற்றக்கூடிய பங்களிப்பின் முக்கியத்துவம் கருதி அவர்களது சிரத்தையையும், ஈடுபாட்டையும் தொடர்ந்து தளரவிடாது பேணுவதில் திடமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்பை த.வி.கூட்டணி செய்து வருகின்றது. சர்வதேச சமுதாயம் முன்னரையும்விட தற்போதுதான் இலங்கையில் நடைபெறும் யுத்தம் நிறுத்தப்பட்டு, ஏற்றுக்கொள்ளக் கூடியதான ஒரு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையாக உள்ளது. இன்று உலகிலேயே இலங்கைவாழ் தமிழ் மக்கள் மட்டுமே மிக மோசமான முற்றுகைக்கு உட்பட்ட இனம் என்பதைச் சர்வதேச சமுதாயத்தின் மனதில் பதியவைப்பதற்கு தன்னாலான முயற்சிகள் அனைத்தையும் த.வி.கூட்டணி சோர்வின்றிச் செயற்படுத்தியுள்ளது-

தொடரும் போர் நடவடிக்கை காரணமாக அறுபதாயிரத்துக்கும் (60,000) அதிகமான தமிழ்க் குடிமக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஒன்பது இலட்சம் (9,00,000) வரையிலான தமிழ் மக்கள் புலம் பெயர்ந்தும், சொந்த வதிவிடங்களை விட்டு இடம்பெயர்ந்தும் உள்ளனர். இவர்களில் பெருந்தொகையினர் பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்-

மீனவர்கள், விவசாயிகள் என்போரின் உழைப்பு பிழைப்புகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புக் காரணங்களைக்காட்டி இம்மக்கள் தங்குதடையின்றி தொழில் செய்யவும் பெரிதும் முட்டுக்கட்டை போடப்படுகின்றது, ஏனைய பொருளாதார நடவடிக்கைகளும் மோசமாகப் பாதிப்படைந்துள்ளன. தொடரும் யுத்தம் எமது மக்கள் மீது திணித்துள்ள பேரிழப்புகளும், அழிவுகளும் எண்ணிலடங்கா. வகைதொகையற்ற கைதுகள், சித்திரவதை, மாணவர்கள் உட்பட குறிப்பாகத் தமிழ் இளம் வயதினர் மீதான பாலியல் வல்லுறவுக் கொடுமைகள், உரிமை மறுப்பு, சட்ட வரம்பு மீறல், நீதி நடவடிக்கை இன்றி நெடுநாள் சிறையில் அடைத்து வைத்திருத்தல் மற்றும் ஏளனப் பழிப்பு, அவமானம் என்பன சகித்துக் கொள்ள முடியாத அளவையும் தாண்டி அன்றாட நடைமுறையாகத் தமிழ் மக்கள்மீது திணிக்கப்படுகின்றன.

தமிழ் இளைஞர் மத்தியில் வேலையில்லாப் பிரச்சனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவிரமடைந்துள்ளதை த.வி.கூட்டணி சம்பந்தப் பட்டோரின் கவனத்துக்குக் கொண்டுவந்து நடவடிக்கை எடுக்க வற்புறுத்தியது. தமிழ் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதில் மோசமான பாராபட்சம் காட்டுதல், பொருளாதாரப் பாதிப்புகட்கு உட்பட்டுள்ள தமிழ் மக்கள் மீது பண்டங்கள் சேவைகள் வரியையும், பாதுகாப்பு வரியையும் திணித்தல் போன்ற நடவடிக்கைகளும், சுமைகளும் தமிழ் மக்களின் உயிர்வாழ்க்கையைப் பெரும் போராட்டமாக்கி உள்ளன.

தமிழ்மக்களின் இழப்புகளையும், துன்பங்களையும் குறைப்பதற்கு த.வி.கூட்டணி தன்னாலான முயற்சிகள் அனைத்தையும் செய்துள்ளது. ஆனால், யுத்தம் முடிவடைந்து தமிழ்மக்கள் தமது சொந்த அலுவல்களை நிர்வகிப்பதற்குரிய போதிய அதிகாரத்தை உள்ளடக்கிய நீதியானதும், ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான அரசியல் தீர்வொன்று ஏற்படும் பட்சத்தில் மட்டுமே எமது மக்களுக்கு நிரந்தர சமாதானத்தை வழங்கி சிறந்த எதிர்காலத்துக்கு வழிவகுக்க முடியும்-

த.வி.கூட்டணி எப்போதும் அவசரகாலச் சட்டம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும்போது தீவிரமாக எதிர்ப்புத் தெரிவிப்பதுடன் நின்றுவிடாது, தமிழ் மக்களை மிகுந்த அவமானத்துக்கும், அளவற்ற துன்பத்துக்கும் உட்படுத்துகின்ற மிகக் கொடிய அவசரகாலச் சட்டத்துக்கு எதிராகவும் வாக்களித்து வருகின்றது. யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஏதுவாக பாராளுமன்றத்தின் அனுமதிக்கு முன்வைக்கப்படும், பாதுகாப்புக்கான பெருந்தொகை நிதிப் பிரேரணைகளைத் தொடர்ச்சியாக எதிர்த்து வருவதுடன், பாதுகாப்பு அமைச்சு வாக்கெடுப்பின்போது அதற்கு எதிராகவும் த.வி.கூட்டணி வாக்களித்து வந்துள்ளது. பாதுகாப்பு அமைச்சு செலவின வாக்கும் வரவு செலவுத் திட்டத்தில் இணைந்திருப்பதனால் த.வி.கூட்டணி 2ஆம் கட்ட வாக்கெடுப்பின் போது முழு வரவு செலவுத் திட்டத்துக்கும் எதிராக வாக்களித்து வருகின்றது.

த.வி.கூட்டணி எப்போதும் கொள்கை, கோட்பாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலேயே செயலாற்றி வருகின்றது. சென்ற ஆண்டின் இறுதியில் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபைபோன்ற அரைகுறை இடைக்கால நடவடிக்கைகளில் பங்கு பற்றுவதற்கு த.வி.கூட்டணி ஒருபோதும் தயாராக இல்லை. இது பெரும் எதிர்மறையான விளைவைத் தருவது மட்டுமன்றி, நிரந்தரத் தீர்வு உருவாவதையும் தாமதிக்கும். த.வி.கூட்டணி இதற்கு ஒத்துழைக்க மறுத்ததன் விளைவாகவே இடைக்கால நிர்வாக சபைத்திட்டம் கைவிடப்பட்டது.

அரசியலமைப்பு சீர்திருத்தப் பணியில் உறுதியாக ஈடுபட்டுள்ள த.வி.கூட்டணி, தெளிவான கொள்கைக் கோட்பாட்டு நெறிகளின் அத்திவாரத்தில் உருவான முதிர்ந்த அரசியல் இயக்கமாகும். தமிழர் பிரச்சனைக்கு உரிய காலத்தில் இணக்கமான அரசியல் தீர்வு காண்பதற்குத் தவறியதே ஆயுதமேந்திய போராட்டம் ஆரம்பிக்கப் பட்டதற்கான காரணமாக அமைந்ததென்பது த.வி.கூட்டணியின் அறிவுசார் நிலைப்பாடாகும். ஆதலால், யுத்தத்துக்கு நிரந்தரமான முடிவு காணவேண்டுமென்றால்; இணக்கமான, ஏற்கத்தக்க அரசியல் தீர்வு காணவேண்டியதே அவசியமானதும், அவசரமானதுமாகும். ஆயுதப் போராட்டத்துக்குக் காரணமாய் அமைந்த மூல காரணிகளை முழுமையாக ஆராயாது, அப்போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரலாம் என்ற கருத்துக்கு உடன்பட முடியாது. நீதியான, ஏற்கத்தக்க தீர்வில் உண்மையான அக்கறை அற்றவர்களும், எதிர்ப்புத் தெரிவிப்பவர்களும், வெறித்தனத்துடன் ஆதரிக்கும் இராணுவத் தீர்வின் மூலம் ஆயுதப் போராட்டத்துக்கு முடிவு காணக்கூடாது, காண முடியாதும் கூட என்பதே த.வி.கூட்டணியின் திடமான நம்பிக்கையாகும். இதன் காரணமாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் முழுமையாகச் சம்பந்தப்பட வேண்டும் என்றும்; பயன் மிக்க மூன்றாந்தரப்புச் சர்வதேச மத்தியஸ்தம் தேவையென்றும், இந்த முன்னெடுப்புகள் சுமூகமாக இடம் பெறுவதற்கு யுத்த நிறுத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்படுமாயின்; பக்கச்சார்பற்ற, சர்வதேச கண்காணிப்பாளர்களதும், மேற் பார்வையாளர்களதும் ஈடுபாட்டுடன் அத்தகைய யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் த.வி.கூட்டணி வற்புறுத்துகின்றது-

தமிழ் மக்களின் எதிர்கால நலனில் மட்டுமே இதய பூர்வமான உள்ளார்ந்த அக்கறை கொண்டுள்ள, முதிர்ந்த அரசியல் கட்சி என்பதாலும், சொந்த நலன்களை ஈட்டுவதற்காக அரசியல் நடத்துகின்றவர்கள் அல்லர் என்பதாலும், உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் மக்களின் நம்பிக்கைக்குரிய கட்சியாக மிளிர்வதாலும், தமிழ் மக்களுக்கு கௌரவத்துடன் கூடிய சமாதானத் தீர்வும், ஏனைய மக்கள் சகலருக்கும் நீதிநியாயமும் விரைவில் கிடைக்கின்ற சூழ்நிலை உதயமாவதற்கும் த.வி.கூட்டணி தன்னாலான கடும் முயற்சியை மேற்கொள்ளும்.

எனவே; யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய தேர்தல் மாவட்டங்களின் வாக்காளப் பெருமக்களே! உங்களது பொன்னான வாக்குகளைத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமான உதயசூரியன் சின்னத்துக்கு அளித்து தமிழர் விடுதலைக் கூட்டணியை வெற்றிபெறச் செய்யுமாறு மிகப் பணிவுடன் வேண்டுகின்றோம்-

வெளியீடு:-

**இரா. சம்பந்தன்,**

*செயலாளர் நாயகம்,*

**தமிழர் விடுதலைக் கூட்டணி.**

146/19- ஹவ்லொக் வீதி, கொழும்பு - 05.

கொழும்பு, லீலா அச்சகம் பிரைவேட் லிமிட்டெட்டில் 19.9.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org